**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

**அசல் வழக்கு எண். 175/2021**

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ம் நாள் செவ்வாய் கிழமை வாதி தரப்பில் இரண்டாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆர்.ஜனனி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரபு | தந்தை பெயர் | : பன்னீர் செல்வம் |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 02.04.2024

**P.W. : 2**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதிகளுக்கு எதிராக எனது அப்பா பன்னீர் செல்வம் தாக்கல் செய்த வழக்கு பற்றிய விவரத்தை கூறவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி வங்கி காசோலை மூலம் கடன் வாங்கும் பழக்கம் கொண்டவர் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு வாதி வங்கி காசோலை மூலம் பணம் கொடுத்துள்ள விவரம் பற்றி தெரியும். அது எவ்வளவு தொகை என்று தெரியாது. பிரதிவாதிக்கு வாதியின் தந்தை காசோலை மூலமாக பணம் கொடுத்துள்ளரா என்றால் அதுபற்றி தெரியாது. நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாதிக்கு எந்தவித கிரைய ஒப்பந்தமும் எழுதி தரவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில்

கூறியுள்ள வா.த.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.